## இலங்கை சீனி தனியார் கம்பனி – 2018

வரையறுத்த இலங்கை சீனி தனியார் கம்பனியின் (''கம்பனி'') 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற ஏனைய தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டதின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படுகின்ற அனைத்து நிறுவனங்களாலும் அந் நிறுவனம் சம்பந்தமாக வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பான முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படுகின்ற ஒவ்வொரு நிறுவனம் சம்பந்தமான வருடாந்த நிதிக்கூற்றுக்கள் சட்டவிதிகளின் மூலம் காட்டப்பட்ட வகையிலான காலப்பகுதிக்குள் அந் நிறுவனத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் சேர்த்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கையும் ஏனைய நிதிக்கூற்றுக்களும் தேவைப்படுகின்ற காலத்திற்குள் தயாரித்தல் இடம் பெறுகின்றது என்பது சான்றுப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கவனித்தல் வேண்டும்.

### 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட நிதி ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஐந்தொகை திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக பொறுப்பான நபர்களினால் சான்றுப்படுத்தப்பட்டது என கம்பனியின் பணிப்பாளர் சபை சான்றுப்படுத்துதல் வேண்டும்.

### 2.1 நிதிக்கூற்றுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் | 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கைத் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அதனை விரைவாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்.**

---

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம் | | | |
| (i) 131 ஆம் பிரிவு | கம்பனியில் வருடாந்த பொதுக்கூட்டத் திகதியிலிருந்து 30 வேலை நாட்களுக்குள் ஆண்டறிக்கையினைத் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும், கம்பனியால் மீளாய்வாண்டின் போது ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | கம்பனியால் மீளாய்வாண்டிற்கான ஆண்டறிக்கையைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கம்பனிகள் அதிகாரச்சட்டத்தி லுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய காலத்திற்குள் ஆண்டறிக்கை யினைத் தயாரிப்பதற்கு நடவடடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 133 ஆம் பிரிவு | ஒவ்வொரு ஆண்டிற்கு ஒரு தடவை கம்பனியின் பணிப்பாளர்கள் சபையால் கம்பனியின் ஐந்தொகை திகதியிலிருந்து ஆறு மாதங்களைப் பிந்தாத ஒரு திகதியின் போது நடத்துவதற்காக பங்குதாரர்களின் | கம்பனியின் ஒரே பங்குதாரர் பொதுத் திறைசேரியாகும். வருடாந்த பொதுக் கூட்டத்தை நடாத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனிகள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் வருடாந்த பொதுக் கூட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வருடாந்த பொதுக் கூட்டத்தை கூட்ட வேண்டிய போதிலும், கம்பனியால் 2014 ஆம் ஆண்டின் பின்னர் அவ்வாறான கூட்டம் நடாத்தப்பட்டிருக்க வில்லை. | | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் | தொழிற்சாலை மற்றும் வடிசாலைக்குப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரம் செவனகல சீனித் தொழிற்சாலையினால் மீளாய்வாண்டின் இறுதிவரை பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | தொழிற்சாலை மற்றும் வடிசாலைகளுக்காக சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாமை.<br><br>தொழிற்சாலையின் கழிவு நீர் சுத்தரிகரிப்பு இயந்திரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதனால் அதன் மாதிரி சுற்றாடல் அதிகாரியினால் பெற்றுக் கொள்ளப்பட்டு பரிசோதனை நடவடிக்கைகளுக்காக எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. அந்த மாதிரிகளின் பகுப்பாய்வின் பின்னர் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரத்திற்காக விண்ணப்பிக்கப்படும்.<br><br>வடிசாலைக்காக சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு வடிசாலையின் உயிரியல் வாயு உற்பத்தி இயந்திரத்தை அமைத்ததன் பின்னர் பெற்றுக்கொள்ளலாம். அதற்காக தேவையான அடிப்படை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதனால் அதற்காக ஆகக்குறைந்தது 2 ஆண்டுகள் அளவில் எடுக்கும். தற்பொழுது அக்கழிவு நீர் கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பிரகாரம் கரும்பு பயிர்ச்செய்கைக்காக ஈடுபடுத்தப்படும். | உரிய அதிகாரச் சட்டத்தின் சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரத்தை விரைவாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) செவனகல சீனித் தொழிற்சாலையின் நீர் சுத்திகரிப்பதற்கான இயந்திரத்தைப் பொருத்துவதற்காக ரூபா 27,067,812 தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் அது 2014 மே மாதமளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையும் அதனை பூர்த்தி செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்காமையின் காரணமாக தொழிற்சாலை பெற்றுக்கொள்ள வேண்டிய சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரத்தையும் பெற்றுக்கொள்வதற்கு கம்பனி தவறியிருந்தது. | செவனகல சீனித் தொழிற்சாலையின் கழிவு நீரை சுத்திகரிக்கும் செயற்திட்டத்தின் வேலை 2014 மே மாதமளவில் பூர்த்தி செய்வதற்கு முடியாமைக்கான பிரதான காரணமாவது சிவில் பொறியியல் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்யும் போது ஏற்பட்ட அசௌகரியங்கள் மற்றும் ஏற்பட்ட தடைகளாகும். 2019 செப்தெம்பர் மாதம் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு இந்த சுத்திகரிப்பு நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப் பட்டிருந்ததுடன் தற்பொழுது சுற்றாடல் மேற்பார்வை உத்தியோகத்தர் உரிய நீர் மாதிரிகளை பரிசோதிக்கும் நடவடிக்கைகளுக்காக எடுத்துச் சென்றுள்ளதுடன் சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளும் இயலுமையையும் உள்ளது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | கழிவு நீரை சுத்திகரிக்கும் நடவடிக்கையை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்குரிய சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரத்தை விரைவாக பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) செவனகல சீனித் தொழிற்சாலையின் 2018 ஆம் ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான இருப்பு மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் பிரதான களஞ்சியத்தில் ரூபா 1,236,195 பெறுமதியான 324 இருப்பு விடயங்களின் | கம்பனியின் இருப்புக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இருப்பு பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் சம்பந்தமான காரணத்தை பரீட்சித்து உரிய சரிசெய்தல்களைச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பற்றாக்குறையும் உப களஞ்சியத்தின் ரூபா 51,843 பெறுமதியான 03 இருப்பு விடயங்களின் பற்றாக்குறையும், ரூபா 689,334 பெறுமதியான 195 இருப்பு விடயங்களின் மிகைகளும் அவதானிக்கப்பட்டதனால் கம்பனியின் இருப்புக் கட்டுப்பாடு பலவீனமான நிலையில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | செவனகல சீனித் தொழிற்சாலையில் 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட வெளி நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டுள்ள காபன்டயொக்சயிட் உற்பத்தி செயற்திட்டத்தின் விற்பனைத் தரவுகளைப் பரீட்சித்த போது நிதிப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ள விற்பனைப் பெறுமதியை விட உற்பத்திப் பிரிவின் உற்பத்திப் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. விற்பனைகளை விட உற்பத்தி குறைவாகக் காட்டப்பட்டிருந்த கிலோ கிராம்களின் அளவு 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக முறையே 7,380, 31,235, 69,086 மற்றும் 341,514 கிலோ கிராம்களாகும். சரியான உற்பத்தி தரவு இல்லாமையின் காரணமாக காபன்டயொக்சயிட் உற்பத்தி நடைமுறையின் உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. | காபன்டயொக்சயிட் உற்பத்தியினை விட விற்பனைகளின் அளவு அதிக பெறுமதியில் காணப்பட்டது. அது பற்றி பரீட்சித்து அக்கம்பனிக்கு இது தொடர்பாக பரீட்சிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு காரணமாக இருக்கக்கூடிய தோற்றுவிப்புக்களின் Load Cell களில் குறைபாடுகள் இருக்ககூடியதனால் அது தொடர்பாகப் பரீட்சித்து மீண்டும் செயற்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. 2018 யூன் மாதத்திலிருந்து செப்தெம்பர் மாதம் வரை உற்பத்தி தரவுகள் முறைப்படியாக காட்டப்பட்டிருக்காததன் காரணமாக உற்பத்தி பெறுமதிகளில் பாரிய வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், உற்பத்தி நடைமுறைகளின் பின்னர் வழங்கப்பட்ட உற்பத்திப் பொருட்களின் நிறைகள் பதியப்பட்டு வழங்கப்படுவதனால் உற்பத்திகளையும் வழங்கல்களையும் இணக்கம் செய்து கொள்ளலாம். | காபன்டயொசயிட் உற்பத்தி மற்றும் சந்தைப் படுத்துவதற்குரிய தரவுகளை சரியாக பேணுவதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கரும்பு பயிர்ச்செய்கை வெளிக்கள | 2018-12-31 இல் உள்ளவாறு அறவீடு | |

உத்தியோகத்தர்களால் இடம்பெற வேண்டிய கட்டுப்பாடுகள் முறைப்படியாக இடம்பெறாததன் காரணமாக கடனை பெற்றுக்கொண்ட விவசாயிகளிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குரிய கடன் தவணைப் பணங்களை நிர்ணயிக்கப்பட்டவாறு அறவீடு செய்வதற்கு உதிதியோகத்தர்கள நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் விவசாயிகளிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகள் செவனகல சீனித் தொழிற்சாலையின் ரூபா 218,319,312 தொகையும் பெல்வத்த தொழிற்சாலையின் ரூபா 472,976,690 தொகையுமாகும். எவ்வாறாயினும், அந்த வெளிக்கள உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்து அவர்களை செயற்படுத்தி உரிய கடன்களை அறவீடு செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

செய்ய வேண்டியுள்ள கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் மீதிகள் ரூபா 472,976,690 தொகை காணப்பட்டது என்பது உள்ளபடியான விடயமாகும். 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 245,329,769 தொகை விவசாயிகளுக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளதுடன் ரூபா 348,443,522 பணம் அந்த ஆண்டின் போது பழைய கடன்களிலிருந்து அறவிடப்பட்டுள்ளது. எனினும், சில ஆண்டுகளின் போது விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடனின் அளவுடன் ஒப்பிடுகையில் கடனை அறவீடு செய்தல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

விவசாயக் கடனை அறவீடு செய்வது சம்பந்தமாக விவசாய பிரதி பொது முகாமையாளர், ஒவ்வொரு வலயத்திற்குப் பொறுப்பான அதிகாரிகள் மற்றும் அவர்களின் கீழுள்ள வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு அடிக்கடி தெரியப்படுத்தல்கள் மேற்கொண்டிருந்தும் அச்செயற்பாடு முறைப்படியாக இடம்பெற்றிருக்காத நிலைமை காணப்பட்டது. இந்நிலைமையை ஆய்வு செய்து முகாமைத்துவத்தினால் விவசாயக் கடன்களை அறவீடு செய்வதற்காக ஒரு தனியான பிரிவை உருவாக்குவதற்கு 2019 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்பொழுது அப்பிரிவிற்கான இணைப்பு உத்தியோகத்தர்கள் விவசாயக் கடன்களை

| | | | |
|---|---|---|---|
| | | அறவீடு செய்வது சம்பந்தமாக உரிய வெளிக்கள உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். | |
| (உ) | செவனகல சீனித் தொழிற்சாலையால் 02 தனியார் நிறுவனங்களுக்காக 2012 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை செலவு செய்யப்பட்டுள்ள மொத்த நீர்க்கட்டண செலவு ரூபா 1,061,245 ஆக இருந்ததுடன் அதற்காக எழுத்துமூல உடன்படிக்கை இல்லாதிருந்ததுடன் அந்த நீர்க் கட்டணங்களை மீண்டும் அறவீடு செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒரு தனியார் நிறுவனம் செயற்பட்டு வந்த கட்டிடம் செவனகல சீனித் தொழிற்சாலைக்குச் சொந்தமாக இருந்ததுடன் இது சம்பந்தமாக எழுத்து மூல உடன்படிக்கையை மேற்கொள்ளும் இயலுமை இல்லாதிருந்ததுடன் 2011/11/11 இலிருந்து இக்கட்டிடத்திற்காக நீர் வழங்கல் வழங்கப்பட்டிருந்தது. | நீர் வழங்கலுக்காக கம்பனி செலவு செய்ய வேண்டியிருந்ததனால் உரிய கட்டணத்தை தனியார் நிறுவனங்களிட மிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | பெல்வத்த சீனித் தொழிற்சாலையின் 04 உத்தியோகபூர்வ இல்லங்களில் வாடகை அடிப்படையில் வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த இல்லங்கள் மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற இரண்டு ஊழியர்கள் அதிகாரமின்றி குடியிருந்த இரண்டு இல்லங்களுக்குரிய வாடகைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வாடகை அடிப்படையில் 4 வெளித்தரப்பினர் களுக்கு கம்பனியால் உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவர்கள் மாதாந்த வாடகையைச் செலுத்துவதற்கு பின்னர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக கம்பனியின் ஓய்வுபெற்றுச் சென்ற இரண்டு ஊழியர்களை கம்பனி சட்டரீதியான சிக்கல்களைத் தீர்த்துவைக்கும் வரை 2 இல்லங்களில் பலவந்தமாக குடியிருந்ததனால் அவர்களும் அத்துமீறிய குடியிருப்பாளர்களாக எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். தற்பொழுது இந்த 6 குடியிருப்பாளர் களிடமிருந்தும் வாடகை | |

| | | |
|---|---|---|
| | அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட நபர்கள் சம்பந்தமான நிலுவை வாடகையினை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே ஓய்வு பெற்று 2 இல்லங்களில் தொடர்ந்தும் குடியிருக்கின்ற இரண்டு ஊழியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (எ) கொள்வனவு செய்த திகதி அல்லது பெறுமதி குறிப்பிடப்படாத பதிவு செய்யப்படாத 134 வாகனங்களும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத பதிவு செய்யப்பட்ட 92 வாகனங்களும் பெல்வத்த தொழிற்சாலைக்கு சொந்தமாகக் காணப்பட்டன என்பது அவதானிக்கப்பட்டது. இந்த வாகனங்களுக்கு மத்தியில் திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு அல்லது அவ்வாறு திருத்தம் செய்ய முடியாத வாகனங்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இணங்குகின்றேன். எனினும், உரிய வாகனங்களின் உரிமையாண்மை இலங்கை சீனி (தனியார்) கம்பனிக்குச் சொந்தமில்லாததுடன் அந்த வாகனங்களை பதிவு செய்தல் இலங்கை சீனி (தனியார்) கம்பனிக்குரியதல்ல. | தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற பதிவு செய்யப்படாத வாகனங்களைப் பொறுப்பேற்கும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத வாகனங்களை கைதவரிப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

கம்பனியின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கைகளை அமுல்படுத்துவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|
| (அ) செவனகல சீனித் தொழிற்சாலைக்குச் சொந்தமான கரும்பு பயிர் | கரும்பு பயிர் புல் வகையைச் சேர்ந்த பயிராகும். ஒரு தடவை புதிதாக நடுகை செய்ததன் பின்னர் பிரம்பு | பயிர் செய்யக்கூடிய காணிகளை பயிர்ச் செய்கை |

செய்யக்கூடிய மொத்தக் காணிப் பரப்பளவு 4241 ஹெக்டயர்களாக இருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டு வரை கம்பனியின் கரும்பு பயிர் செய்யப்பட்டிருந்த மொத்த காணிப் பரப்பளவு 3355 ஹெக்டயர்களாகும். இதற்கிணங்க தொழிற்சாலையின் செயற்பாடுகளை உச்ச இயலளவுடன் பேணுவதற்குத் தேவையான கரும்பு வழங்கலைப் பெற்றுக் கொள்வதற்கு போதியளவான காணிகள் கம்பனியிடம் காணப்பட்டிருந்தும் அக்காணிகளை பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தி தொழிற்சாலையின் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

பயிராக பராமரித்து வருடாந்தம் அறுவடையைப் பெற்றுக்கொள்ளும் பயிராகும். மேலும் இப்பிரதேசத்தில் விவசாயமானது காலநிலையின் பிரகாரம் சிறுபோகம் மற்றும் பெரும்போகத்தில் மழையை இலக்காகக் கொண்டு மேட்டு நிலத்தில் பயிர்களை நடுகை செய்தல் இடம்பெறுகின்றது.

அவ்வாறே 4 ஆண்டுகள் 5ஆண்டுகள் அளவில் தொடர்ச்சியாக விளைச்சலை அறுவடை செய்த காணிகளில் மீண்டும் நடுகை செய்வதற்கு திட்டமிடப்படுகின்றது. வருடாந்தம் எங்களின் நடுகை நிகழ்ச்சித்திட்டமானது 600 ஹெக்டயர்களுக்கும் 800 ஹெக்டயர்களுக்கும் இடைப்பட்ட பெறுமதியைக் கொண்டிருந்தது. இந்த நடுகை செய்வதற்காக திட்டமிடப்பட்டுள்ள காணிகளில் இறுதியான கரும்பு அறுவடையின் பின்னர் மீண்டும் நடுகை செய்யும் வரை தரிசாக பேண வேண்டி ஏற்படுகின்ற காலம் இறுதியாக காணப்படுகின்ற சந்தர்ப்பமாகும்.

எனவே வருடாந்தம் கரும்பு தண்டுகள் 250,000 மெட்ரிக்தொன் இயலளவு தொழிற்சாலைக்குரியதாகும் ஒரு நாளுக்கு 1000 மெட்ரிக் தொன்கள் வீதம் 250 நாட்கள் குறுகிய மற்றும் நீண்ட அரைத்தல் 2 தவணைகளை அது உள்ளடக்கியுள்ளது. இந்நாள் கணக்கில் முரண்கள் ஏற்படுவதாவது மழை காலம் ஆரம்பித்தலின் பிரகாரமும் கரும்பு அறுவடைக்கும் அரைப்பதற்கும் பொருத்தமான வறட்சிக் கால நிலைமை மாத்திரமாக இருப்பதுமாகும்.
எவ்வாறாயினும், சட்டரீதியற்ற முறையில் கரும்பு பயிர்ச்செய்கை கைவிடப்பட்ட காணிகள் சம்பந்தமாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் எங்களால் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டு வருவதுடன் காணிகளை ஒட்டுமொத்தமாக முகாமைத்துவம் செய்யும் உரிமையானது எங்கள் நிறுவனத்துக்கு இல்லாததனால் ஏற்பட்டுள்ள சிக்கல்களின் காரணமாகவும் இந்நிலைமை உருவாகியுள்ளது.

பண்ணுவதற்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

(ஆ) உற்பத்திக்காக ஈடுபடுத்தப்படுகின்ற கரும்புத் தண்டுகளில் காணப்படுகின்ற சீனியின் அளவு 2012 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை முறையே பெல்வத்த சீனிக் கம்பனியில் கரும்பு ஒரு அலகு மெட்ரிக் தொன்னிற்கு 10.87 சதவீதத்திலிருந்து 9.88 சதவீதம் வரையும் செவனகல சீனித் தொழிற்சாலையில் 11.05 சதவீதத்திலிருந்து 9.17 சதவீதம் வரையும் குறைவடைந்திருந்தது. அவ்வாறே கரும்புத் துண்டுகளில் சீனி பிழிந்தெடுக்கும் சதவீதம் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை பெல்வத்த சீனித் தொழிற்சாலையில் முறையே 8.81 சதவீதத்திலிருந்து 7.55 சதவீதம் வரையும் செவனகல சீனித் தொழிற்சாலையில் முறையே 8.01 சதவீதத்திலிருந்து 6.59 சதவீதம் வரையும் குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், இந்நிலைமையை மேம்படுத்துவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2012 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட கரும்புத் துண்டுகளில் காணப்பட்ட சீனி சதவீதமும் கரும்புத் துண்டுகளில் சீனி பிழிந்தெடுக்கும் சதவீதமும் பின்வருமாறாகும்.

| **ஆண்டு** | **கரும்பு தண்டுகளில் காணப்பட்ட சீனி சதவீதம்** | **சீனி பிழிந்தெடுக்கும் சதவீதம்** |
|---|---|---|
| ------------ | ------------------ | ------------------ |
| 2012 | 10.87 | 8.81 |
| 2013 | 10.70 | 8.52 |
| 2014 | 10.40 | 7.94 |
| 2015 | 9.86 | 7.58 |
| 2016 | 10.62 | 8.21 |
| 2017 | 9.60 | 7.30 |
| 2018 | 9.88 | 7.55 |

அதற்கிணங்க கரும்பு தண்டுகளிலுள்ள சீனி சதவீதமும் சீனி பிழிந்தெடுக்கும் சதவீதமும் குறைவடைதல் 2015, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது காணப்பட்டிருந்தன. கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டு இதற்காக ஆராய்ச்சிகள் செய்யப்பட்டதன் பின்னர் ஈடுபடுத்தப்படுகின்ற தனித்தனியான பசளை வகைகளுக்காக கலவைப் பசளைகளை ஈடுபடுத்துவதற்கு 2017 ஆம் ஆண்டின் இறுதி அரைப் பகுதியின் போது முகாமைத்துவம் தீர்மானம் எடுத்திருந்தது. எனினும் 2018 ஆம் ஆண்டு வரை சீனி சதவீதங்களில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றங்கள் காணப்படவில்லை.

செவனகல சீனி பிழிந்தெடுக்கும் சதவீதம் குறைவடைந்தமை தொடர்பாக பரிசோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதுடன் அதற்கான ஒரு காரணமாக புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கரும்பு இனம் முதன்மையானது என்பது வெளிப்படுத்தப்பட்டது. அந்த இனம்

கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவின் மூலம் இச்சதவீதங்கள் குறைவடைவதற்கு தாக்கமளித்துள்ள காரணங்களைப் பரீட்சித்து அப்பெறுமதியை அதிகரிக்கச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | நீர் வழங்கல் பிரதேசங்களுக்குப் பொருத்தமானது அல்ல என்பது தெளிவானதனால் அக்கரும்பு இனத்தை மாற்றம் செய்வது தொடர்பாக கலந்துரையாடப்பட்டு வருகின்றது. | |
| (இ) | கரும்பு வழங்குதல் குறைவடைந்ததன் காரணமாக கம்பனியின் தொழிற்சாலைகளின் உச்ச இயலளவான கரும்பு 897,500 மெட்ரிக்தொன்களில் 34 சதவீதமானது பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இலங்கை சீனிக் கம்பனிக்கு சொந்தமான பெல்வத்தை அலகில் கரும்பு பயிர்ச் செய்கை பேணப்பட்டு வருவது மழைநீரை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளதுடன் ஒவ்வொரு ஆண்டிலும் கிடைக்கும் மழை வீழ்ச்சியானது கரும்பு விளைச்சலுக்கு கூடுதல் தாக்கமளிக்கின்றது. ஏதாவது ஆண்டின் தேவையான காலப் பகுதியின் போது மழைவீழ்ச்சி கிடைக்க வில்லையாயின் 01 ஹெக்டயர், காணியிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய கரும்புத் தண்டுகளின் அளவு குறைவடையும். அதற்கிணங்க பெற்றுக்கொள்ளக்கூடிய மொத்த கரும்பு மெட்ரிக்தொன்களின் அளவும் மட்டுப்படுத்தப்படும்.<br><br>கரும்பு பயிர்ச்செய்கைக்காக உள்ள காணிகளின் அளவு மட்டுப்பாடாக இருத்தல், மழை நீர் இல்லாமை ஆகிய விடயங்களின் காரணமாக இந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நிறுவனத்திற்கு முடியாதிருந்தது. எனினும், நிகழ்கால முகாமைத்துவம் இதற்கான பரிகாரமாக கல் அணைக்கட்டு செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் மற்றும் அதற்கு சமாந்திரமாக சிறிய குளங்களை அபிவிருத்தி செய்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே வெளி விவசாயக் காணிகளின் அளவை விஸ்தரித்தல் கரும்பு மரங்களுக்காக அதிக விலையினைக் கொடுப்பனவு செய்வதன் மூலம் விவசாயிகள் கரும்பு பயிர்ச்செய்கையில் ஈடுபடுதல் ஆகிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி மேற்கூறிய இயலளவிற்காக கரும்பு வழங்குவதனை அதிகரிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஈ) | செவனகல சீனித் தொழிற்சாலையால் 2015 ஆம் ஆண்டின் போது | 2015 ஆம் ஆண்டின் செப்தெம்பர் மாதத்தில் காபன்டயக்சொயிட் இயந்திரத்தளத்தில் வேலைகள் | உரிய இயந்திர சாலைகளில் காணப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பிக்கப்பட்ட காபண்டயக்சொயிட் உற்பத்திச் செயற்திட்டம் தொடர்பாக அந்த ஆண்டின் போது உற்பத்தி 84,580 கிலோகிராம்களாக இருந்ததுடன் 2016 ஆம் ஆண்டளவில் அது 1,147,705 கிலோகிராம்கள் வரை 1257 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.<br>எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டளவில் அது 334,896 கிலோ கிராம்கள் வரை 243 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. | ஆரம்பிக்கப்பட்டன. எனவே 2015 செப்தெம்பர் மாதத்திலிருந்து 2015 திசெம்பர் மாதம் வரையான உற்பத்தி 84,580 கிலோகிராம்களாகும்.<br><br>2016 ஆம் ஆண்டில் வடிசாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் 243 நாட்கள் அளவில் இடம்பெற்றதனால் அதற்கு நேரொத்த வகையில் காபன்டயொக்சயிட் உற்பத்தி 1,147,705 கிலோகிராம்கள் வரை அதிகரித்திருந்தது.<br><br>2018 ஆம் ஆண்டில் வடிசாலை 218 நாட்கள் காலம் பேணப்பட்டிருந்தும் காபன்டயிக்சொயிட் இயந்திர சாலையில் பழுதுகள் ஏற்பட்டிருந்ததனால் அது 65 நாட்கள் அளவான காலம் செயற்பட்டிருந்தது. எனவே, ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் 541,800 கிலோ கிராம்கள் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. | பழுதுகளை விரைவாக சரிசெய்து உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | செவனகல சீனித் தொழிற்சாலை 2018 ஆம் ஆண்டிற்காக பாதீடு செய்த கரும்பு அரைத்தல் அளவு 250,000 மெட்ரிக் தொன்களாக இருந்தும் உள்ளபடியான கரும்பு அரைத்தல் அளவு 223,293 மெட்ரிக் தொன்களாக இருந்ததனால் 26,713 மெட்ரிக்தொன்கள் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தமையானது திட்டமிடப்பட்ட அளவில் கரும்மை அரைப்பதற்கு முடியாதிருந்தது. அது 2013 ஆம் ஆண்டின் பின்னர் 56 சதவீதத்திற்கும் 58 சதவீதத்திற்கும் இடைப்பட்ட பெறுமதியை சுட்டிக்காட்டியிருந்தும் 2005 - 2006 காலப்பகுதியில் கரும்பு அரைத்தல் சதவீதம் 68 சதவீதம் வரை உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. அந்த நிலைமையை அதிகரிக்கச் செய்வதற்கு கடந்த 12 ஆண்டுகள் காலத்தின் | இந்த இலக்கினை அடைந்து கொள்வதற்கு பல்வேறு காரணங்கள் தாக்கமளித்திருந்தது.<br><br>ஊழியர் சச்சரவுகள் காரணமாக 20 நாட்கள் காலம் கரும்பு அரைப்பதற்கு முடியாதிருந்தது. அதனால் 20,000 தொன் கரும்புகள் இழக்கப்பட்டிருந்தது. 2018 செப்தெம்பர் மாதத்திலிருந்து அதிக மழை வீழ்ச்சி கிடைத்ததன் காரணமாக கரும்புகளை எடுத்துச் செல்லல் மற்றும் பொயிலரை செயற்படுத்துதல் சிக்கலானதாகும். | உரிய இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

போது கம்பனிக்கு முடியாதிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | செவனகல மற்றும் பெல்வத்த சீனித் தொழிற்சாலைகளின் பயிர்நிலத்தை தயார்ப்படுத்தும் நடவடிக்கை 2013 ஆம் ஆண்டிலிருந்து கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது மீளாய்வாண்டு வரை படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்தது. நிலத்தை உழுதல், மண்ணை புரட்டுதல், கட்டிகளை தூளாக்குதல், கோடு அடித்தல், கரும்பு நடுதல் ஆகிய நடவடிக்கைகள் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவடைதல் முறையே 85, 65, 67, 67 மற்றும் 70 சதவீதங்களாக இருந்ததனால் செயற்திறனாக பயிர்ச்செய்கை நிலத்தை தயார்ப்படுத்துவதற்காக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பெல்வத்தை<br>---------------------<br>ஒவ்வொரு ஆண்டிற்குமாக புதிதாக நடுகை செய்ய வேண்டிய பயிர்ச்செய்கை காணிகளின் அளவு அந்த ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் மூலம் தீர்மானிக்கப்படுவதுடன் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் உள்ளபடியான பயிர்ச்செய்கை காணிகளின் அளவு மாற்றமடைந்துள்ளது. 2013 ஆம் ஆண்டிலிருந்து அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட பயிர்ச்செய்கை காணிகளின் அளவும் உள்ளபடியாக பயிரிடக்கூடியதாக இருந்த அளவும் பின்வருமாறாகும். | பயிர்ச்செய்கை காணிகளை தயார் படுத்துவதற்காக தேவையான இயந்திர உப காரணங்களை புதிதாக கொள்வனவு செய்து பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை செயற்திறனாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| Year | Budget | Actual | Variance |
|---|---|---|---|
| | (Ha) | (Ha) | (Ha) |
| 2013 | 2,757 | 3,734 | 977 |
| 2014 | 2,511 | 3,061 | 550 |
| 2015 | 2,844 | 1,947 | (897) |
| 2016 | 2,573 | 3,007 | 434 |
| 2017 | 2,884 | 2,797 | (87) |
| 2018 | 2,797 | 1,783 | (1,013) |

அதற்கிணங்க 2015 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது இலக்கிடப்பட்ட மதிப்பீட்டினை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் அதற்கு பிரதான காரணமாவது இலங்கை சீனிக் கம்பனி பெலவத்தை நிறுவனத்தின் உயர் நிருவாகத்தில் தொடர்ச்சியாக மேற்கொண்ட மாற்றங்களின் காரணமாக 2015 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது நிலத்தை உழுவதன் மூலம் (புழுதி) நிலத்தை தயார்ப்படுத்துவதற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தாமதித்தல், மழை வீழ்ச்சியானது எதிர்பார்த்த காலத்திற்கு முன்னர் கிடைத்தல், மழை தொடங்கியதன் பின்னர் அதிக அளவான மழையின் காரணமாக ஈர நிலத்தை தயாரிப்பதன் மூலம் மாத்திரம் எதிர்பார்த்த இலக்குகளை

மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதிக்குள் அடைந்து கொள்ள முடியாமையினாலாகும்.
எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டின் போது இலக்கிடப்பட்ட பயிர்ச்செய்கை காணிகளின் அளவை அடைந்து கொள்வதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

செவனகல

------------------

| Year | Program | Progress | Percentage |
|---|---|---|---|
| 2013 | 1,252 | 771 | 162% |
| 2014 | 1,027 | 716 | 143% |
| 2015 | 591 | 839 | 70% |
| 2016 | 543 | 632 | 85% |
| 2017 | 683 | 716 | 95% |
| 2018 | 850 | 343 | 40% |

நிறுவனத்தில் இயந்திரங்கள் தட்டுப்பாடு மற்றும் பழைய உடைந்த இயந்திரங்கள் காணப்படுவதன் காரணமாக சில ஆண்டுகளில் நிலத்தை தயார்ப்படுத்துவதற்குரிய இலக்குகளுக்குச் செல்வதற்கு முடியாதிருந்தது.

அவ்வாறே ஏனைய பயிர்ச்செய்கைகளுக்காக விவசாயிகள் ஈடுபடும் போது விளைச்சல் இலக்குகள் குறைவடையும் சதவீதம் நிறுவனம் முகங்கொடுக்கின்ற சிக்கலாகும். 2018 ஆம் ஆண்டில் எங்கள் நிறுவனத்திடம் நிலத்தை தயார்ப்படுத்தும் இயந்திரங்கள் 3 ஆக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமான நாங்கள் அடைந்து கொள்ளக்கூடியதாக இருந்தது 40% அளவிலானதாகும்.

2020 ஆம் ஆண்டின் போது 10 புதிய இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதனால் அதன் பின்னர் உரிய இலக்குகளை எங்களால் அடைந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

## 3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 128,910,000 பெறுமதியான குத்தகை வசதிகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட கிரேன் இயந்திரங்கள் வழங்குனர்களினால் கம்பனி இணங்கிக் கொண்டவாறு தொழிற்சாலையில் ஸ்தாபிக்கப்படாததன் காரணமாக கொள்வனவு செய்த திகதியிலிருந்து எதுவித பிரயோசனமும் எடுக்க முடியாத நிலைமை காணப்பட்டது. இந்த இயந்திரங்களுக்காக மீளாய்வாண்டின் போது கம்பனியால் செலுத்தப்பட்டுள்ள குத்தகை தவணைப் பண பெறுமதியும் வட்டியும் ரூபா 21,734,748 ஆக இருந்ததுடன் இன்னும் எஞ்சியுள்ள 02 ஆண்டுகள் வரை வட்டியுடன் செலுத்த வேண்டிய மொத்த தவணைப் பணம் ரூபா 5,433,732 ஆக இருந்ததனால் இச்செலவு விளைவற்ற செலவாக மாறியிருந்தது. | 2013/2014 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட இந்த கிரேன் செயற்திட்டம் வெற்றியளிக்காது தற்பொழுது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலை காணப்பட்டது என்பது உள்ளபடியான விடயமாகும். இச்செயற்திட்டத்தை 2014 யூன் மாதமளவில் முடிவுறுத்தி அந்த ஆண்டின் பெரும் போகத்தில் கரும்பு அரைக்கும் தவணைக்காக பயன்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு வேலை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் நடைமுறைப் படுத்தி மிகவும் குறுகிய காலத்தில் பாதிப்பிற்கு உள்ளாகியிருந்தது. மீண்டும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அது பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ள முடியாத நிலையில் காணப்பட்டது. அரசாங்கத்தின் நிதி குற்றவியல் பிரிவின் மூலம் இது சம்பந்தமாக புலனாய்வு செய்தல் இடம்பெற்றிருந்ததுடன் அதன் இறுதித் தீர்ப்பும் எங்கள் நிறுவனத்திற்கு தெரிவிக்கப்படவில்லை.<br>இச்செயற்திட்டத்தின் மொத்தக் கிரயம் ரூபா 128,910,000 ஆகும். இதில் 25% ஆன தொகை அதாவது ரூபா 32,000,000 பணம் முற்பணமாக உரிய வழங்குனரான PanCare நிறுவனத்திற்கு நேரடியாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் மிகுதியான பணம் நிதிக் குத்தகை முறைமையில் இலங்கை வங்கி பெல்வத்தை கிளையின் மூலம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் போது ரூபா 11,812,500 பெறுமதியான குத்தகை உடன்படிக்கைக்குரிய பணத்தை செலுத்துவதற்கு முதலாவதாக எங்கள் நிறுவனத்தின் முகாமைத்துவத்தினால் வங்கிக்கு தெரியப்படுத்தியதன் பின்னர் கொடுப்பனவு கைவிடப்பட்டிருந்தது. இப்பணத்தை குத்தகை பொறுப்பாக கணக்கறிக்கைகளில் காட்டப்பட்டுள்ளதுடன் | இது சம்பந்தமாக முறையான விசாரணை மேற்கொண்டு அது தொடர்பான பொறுப்பான நபர்களை இனங்கண்டு அவர்கள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இச்செயற்திட்டத்தின் கையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணமாகக் காணப்படுவதும் இப்பணம் மாத்திரமாகும். 2019 ஏப்ரல் மாதமளவில் ஏனைய அனைத்து குத்தகை தவணைப் பணங்களும் செலுத்தி முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் மேலே குறிப்பிட்ட கைவிடப்பட்டுள்ள குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்து ரூபா 11,812,500 பணத்தை குத்தகை பொறுப்புக் கணக்கிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கலாம். இச்செயற்திட்டம் சம்பந்தமாக நிறுவனத்தின் மேல் முகாமைத்துவம் உரிய வழங்குனருடன் மீண்டும் கலந்துரையாடிக் கொண்டிருப்பதுடன் இது நிறுவனத்தின் சட்டப் பிரிவிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.